1971 ஜூலை 21]

பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தல்

*354 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பீடித்தொழில் நிலையங்களை நவினப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழில் வணிகத்துறையைப் பொறுத்தமட்டில் பீடித் தொழில் நிலையங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றும் இல்லை

திரு. கே. எ. வகாப் : இன்றைய தினம் வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கும் அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக் கூறி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்குள்ள சிகரெட் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்சாலைகளில் உள்ள நவின முறைகளைக் கண்டு, நம் நாட்டில் பீடித் தொழிலாளர்கள் காசநோய் போன்ற பல வியாதிகளால் அல்லல்படுகிறார்கள். ஆகவே, அதை என்னரியாவது நவின முறையில் அதை அமைக்கும் திட்டத்தோடு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசைப் பொறுத்தவரையில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இதை நடத்தி வருகின்றன. தனியார் துறையில் எந்தளவு இதைப் பாதுகாப்பிக்க வேண்டுமென்று கேட்டால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Staff of High Court.

*355. Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the staff of the High Court stayed away from work in November 1970; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1970 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் நாள் சனிக்கிழமையன்று சென்னை உயர்நீதிமன்றப் பணியாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் "சென்னை உயர்நீதி மன்றப் பணியாளர் சங்கத்தை" உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி வேலைக்கு வாராமல் நின்றனர். அதேநாளன்று தலைமை நீதிபதியவர்கள் அச்சங்கத்திற்கு அங்கிகாரம் வழங்கினர். உயர்நீதி மன்றப் பணியாளர்கள் 30—11—1970 திங்கட்கிழமையன்று வேலைக்குத் திரும்பினர்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any members of the staff have been punished on account of this agitation ?

THE HON. THIRU S. MADHAVAN : I have no information.